உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மாரில்
ஒருவராகிய

சிறுத்தொண்டநாயனார்விலாசம்

இஃது,

புரசைமாநகரம்

பரசுராமக்கவிராயரவர்கள்

இயற்றியது.

[illegible]

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

[illegible]

பரசுராமமுதலியார்

குமாரர்

ஸ்ரீ-கன்னியப்பமுதலியார்

அண்டிபிரதா-அவர்களால்,

[illegible]

பாப்பிரய்ய முத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

[illegible]



கடவுள்துணை.

புத்தகவிளம்பரம்.


—*—

இதனால் சகலமானபேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் சென்னையைச்சார்ந்த சூளை இருங்குன்றம் இலட்சுமிநாராயணபுரத்தில் தொட்டிக்கலை குமாரப்பமுதலியார்வீதியில் ௫௯-வது கதவிலக்கமுள்ளகிருகத்தில் ஸ்தாபிதமாகின்ற பரப்பிரமமுத்திராட்சரசாலையில் இதனடியில் கண்டிருக்கப்பட்ட புத்தகங்களல்லாமல் கற்றுணர்ந்தபெரியோர்களால் பிழையறப்பரிசோதித்து அச்சிடப்பட்ட மிகமேலாகிய உபயோகமுள்ள பலவித வேதாந்த சித்தாந்தகிரந்தங்களும், வயித்தியக்கிரந்தங்களும், ஜோசியக்கிரந்தங்களும், சமஸ்கிருதகிரந்தங்களும், மகம்மதுமார்க்கக்கிரந்தங்களும், இன்னும் அனேகவிதமான தமிழ்ப்புத்தகங்களும், விலைசரசமாய் விற்கப்படுமாகையால் வேண்டியவர்கள் மேற்படி அச்சுக்கூடத்தலைவராகிய தி-ப-கன்னியப்பமுதலியாரவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீமகாபாரதவசனம் ௧௮- பர்வம் திக்குகாகிதம்
ஸ்ரீமகாபாரதசங்கீர்த்தனை
ஸ்ரீமகாபாகவதவசனம் ௧௨ ஸ்கந்தம் லெத்தகிராப்படத்துடன்
ஸ்ரீமத் சம்பூர்ணராமாயண வசனமாகியம் சப்தகாண்டங்களுடனும் திக்குவிஜயமுட்பட
பெரியபுராணம் வசனகாவியச்சுருக்கம்-௬௨-படங்களுடன் கிரயரூபா-௩
பிரம்மோத்தரகாண்டம்
ஸ்ரீவிஷ்ணுபுராணவசனம்
விராடபர்வம் குட்டைசயிசில் அச்சிட்டது
பெரிய பராங்குசதாசர்கீர்த்தனை
அராபிக்கதை திக்குகாகிதம்
வீரமாமுனிவர்சதுரகராதி-அனுபந்தத்துடன் - பெரியஎழுத்தில் அச்சிட்டது
வயித்தியசாரசங்கிரகம்
அகஸ்தியர் ஏமதத்துவமென்னும் பஞ்சகாவியநிகண்டு
தட்சிணாமூர்த்திதிருமந்திரம் ௩௱
தன்வந்திரிசிந்தாமணி ௮௨௱
இராமதேவர்வயித்தியகாவியம்-௩
அகஸ்தியர் ஆயுள்வேதம்-௫௨௱
யூனானி பதார்த்தகுண சாரசங்கிரகம்
போகர் சத்தகாண்டம்-௭௲
அகஸ்தியர் பாலவாகடம்
வயித்தியமூலிகை அகராதி
பதார்த்தகுணசிந்தாமணி
நளவீம பாகசாஸ்திரம்
குமாரசாமீயம்
ஜாதகசிந்தாமணி
சினேந்திரமாலை
கசசுல்லன்பியா
இறவுசுல்கூல்படைப்போர்மூலம்
ஐந்துபடைப்போர்
அப்பாசுநாடகம்
சீறாபுராணம்

☞ அகஸ்தியர்காவியம்-௧௨௲-அச்சிட்டுக்கொண்டு வருகிறோம்.
ஸ்டாம்பு அனுப்பினாலல்லது பதில்கடிதம் அனுப்பப்படமாட்டாது.





உ

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டநாயனார்விலாசம்.

——— * ———

விநாயகர்காப்பு-வெண்பா.

புள்ளார்சடைப்பரமன்பொன்னம்பதம்பெற்று
புலவோர்பதந்தொழுவர்நீல—பாவாரில்
விநாதசிறுத்தொண்டர்விலாசந்தனைப்பாடக்
சந்தாதந்தந்திமுகன்காப்பு.

சண்முகர்துதி-கவி.

ஆறுமுகம்புயமிக்கல்பன்னிரண்டும்
பாரிருங்குசமேந்துகையுமேவுமு
காப்போடப்புயந்தனைக்கொண்டபதமதிகள்
உறுப்பாதங்களுறுவென்றுயன்மயிலமீத.

பரமசிவன்துதி-கவி.

ஒருமுகமாகிச்சராசரமும்பரிபூரணிசனைவலைசயாகிப், பெருகிய பேரருளேபாலையாய்ப் பெருமையுடனேயமாய்நிறைந்து, பொருவறுந் தொழிலாலம்பெருகாது தாமேபாசமுமிவற்றின்மேலாகி, மருவுமெய் ஞானத்தனிப்பரஞ்சுடரைவைகலும்புளத்தினில்வைப்பாம்.

உமாமகேஸ்வரிதுதி-கவி,

பதினெண்கோடிஆயிர்கள்பலவின்றுக்காமயமேல்
விதியாளர்சிவாலயமீன்றுவின்றிறைத்தமையின்று
துதிவிரிபெரியபாண்டுபுங்கந்தனையுமென்னையுமின்று
புதிராவினையைப்பொருமுனைமுன்றுமணிப்பதஞ்சென்னியிலணிவாம்.

கலைமகள்துதி-கவி.

வேதநூலினிறைந்துமொழிவேதநான்குமுண்ணிறைந்து
போதுவாயாங்கமொடுபுராணநிறைந்து நிறைந்து

நீதியகாமுதலெழுத்தினிறைத்துவெண்டாமரைநிறைந்து
நாதரச்சோதியினளினத்தாளந்தகத்தினிறைந்திடுமே.

திருமால்துதி-கவி.

பெருமானிரைக்காய்மலையெடுத்துப்பெருகிவருங்கன்மழைதடுத்து
வருமானடியார்பயிர்தழைத்துவளரக்கருணைமழைபொழிந்தே
ஒருமாத நளாற்செல்வமிருந்தோங்குமீரேழுலகளிக்குந்
திருமான்மலர்ச்சேவடிபோற்றிச்சிந்தாகுலத்தைத்தீர்த்திடுவாம்.

குருவணக்கம்-கவி.

மருளைக்காட்டும்பாசமயமயக்கமகற்றியஞ்ஞான
இருளைக்காட்டிடாதோட்டிபெருந்தகுடராஞ்சிவமென்னும்
பொருளைக்காட்டிச்சத்தியத்திற்பொருந்தும்வகையிதெனக்காட்டி
அருளைக்காட்டியாள்பொன்னம்பலத்தேசிகன்றாளகத்துள்வைப்பாம்.

மாறுரைக்கன்-கவி.

தருமமோருருவாய்வருசிறுத்தொண்டன்றனைப்புகழ்சரித்திரத்தொடர [illegible] மாந்தநாடகமாந்தமிழ்தகவேசெய்தான்சாருமானவனா [illegible] ஆ [illegible] ரியவாங்காரச்சற்பிளத்தலையுங்கபோனபபாரையுந்திருத்திக், [illegible] அருஞானவிஞ்ஞதனைப்புகழ்ச்சுககனியமன்பென்றுநீர்பாய்ச்சிச், [illegible] விலாதசெகயானைபயர் [illegible] சேர்ந்திடாதோட்டிமேவிளைத்தாச், [illegible] பெருமபோசகந்தப்பந்திடச்செய்தோர்திருவுறைபுரசைபாநகரில், [illegible] மையாயுலாஞ்செப்பிடுந்தவத்தாலருட் [illegible] ரைக்கங்கைகுலத்தி, [illegible] ரிதமுலவுஞ்சிற்குணப்பாசிராமனென்றோருயாதவனே.

இதுவுமது.

அறந்தழைத்திலங்குஞ்சிறுத்தொண்டன்சரித்திரந்தனைவிலாசமதாக் சிறந்திடவுரைத்தான்சண்முகத்தோருஞ்செவிக்குமேலதாகமங்களை கரைந்திடுஞ்சிவபோதப்பொருளைவள்ளலின்றன்பயிட்டினையுடைய ன்பிறந்திறவாதபரந்தருஞானப்பாசிராமப்பெரியோனே.

இராகம்-நாட்டை-தாளம்-ஐம்பை.

தடையிலன்பிருநேசா-சகமகிழ்சகஸ்ரநாமா
  தழையவிதழிமலர்த்தாமா-சாவசரபூபா — செயசெயா
விடையில்வருமகதேவா-விரிமறைசொன்மொழிநாவா
  வினையனருள்பெறநாவாய்-விரைசொளடிபூவா — செயசெயா
இடையருவுபுலித்தோலா-இலகுகரத்திரிசூலா
  இனியகலைமதில்சீலா-இறைவிமேவுபாலா — செயசெயா
சடைபுனைநடையுலாசா-கயிலைமலைதனில்வாசா
  கருணைபருணுமகேசா-கருணாமறைநேசா — செயசெயா
படவுரகமணிவாகா-பவளநிறமொளிர்தேசா
  பழவடியர்தொழும்யோகா-பாவநதிமோகா — செயசெயா
வடிவுலவுமலர்ப்பாதா-மணிமகரக்குழைக்காதா
  வருமுயிர்க்கருளுந்தாதா-மருவிபிரக்கியாதா — செயசெயா

சுடர்தருபிர்ம்கபாலா—துதிபெறுமாகமமூலா
சபல்லிதகுணசீலா-சுஜனபரிபாலா செயசெயா
குடமுனிக்கருள்பிரபோதா-குலவியப்ரணவநாதா
குளநயனமுறுநீதா—குடிலவிஸ்வநாதா செயசெயா

மங்களம்-இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-திரிபுடை.

மங்களம்-ஜெய-மங்களம்.

சிவநாதந்தனியாயுற்றுப்-பரபோதந்தனையேபெற்றுக்
கலைமறிவாய்செறிவாய்—கதிமதிபிறிவாயறிவாயிலகிடு
மொளிவருசித்துகள்பற்பல மகிமைகள்தருசிற்பரமுத்தியினிலைபெற
வரவரவருள்பெருகிடமுடிமிசைநிதர்நடமிடும்திருவுலபொருட்குநன்
எங்குந்தனிப்பரமாய்-இலகிடுமெழிலார்கருணைக்கடலாகவே
தங்கும்மூலாதாரஞ்சாருமொருசபைபதிதனக்குந்
திருபெருநருதள்—சேருந்தெய்வயானைவள்ளிக்குந்
திகழ்மாவடிவேலவர்க்கும் மங்களம்
ஆதிபரமனுக்கும்அமுதகலைமதிரவியமழல்விழி ஆதி
அடர்ந்தெழுஞ்சிறந்தபுங்கலர்நிரந்தரப்பணிந்துதுதிசெயும் ஆதி
அமதில்புறபதிலனுதினமுறைஅருமறையவமுடியினில்நடமிடும்
அற்புதச்சுதநிக்கலையொருபுறம்வைத்துச்சுத்தச்சிவபெருமொரு
ஆதிபரமனுக்கும்அரியகலைமகட்கும்
நீதிதிருமாலுக்குமதிருத்தமலர்மாதுக்கும்
நிலமறையுமடியவருக்கும்நிலைபெறுங்கலைசுருதிக்கும்
நிலைதருமாமறையவருக்கும்மறைநெறியுந்தவமுனிவருக்கும்
நிமலமதனத்தண்டருக்கும்புகழ்நெடியசிறுத்தொண்டருக்கும் மங்கள

இராகம்-தோடையம்—தாளம்—திரிபுடை.

சேந்தன்பரவும்வேதாந்தன்குறமகள்
காந்தன் ஊனிருமேகாந்தன் அருள்செய்யவே
அண்டருமகிழ்தொண்டருமடிபணிபண்டருமொழிவிண்டிடு முறைதரு
அருவனும்மாதவனுமலர்ப்-போதகனுந்போதகனுந்துதி சேந்
பலமுதவும்பலமதுபெறமுனம்-நலமுலவுமுலகினைவலம்வரு சேந்
அரியினிலுயர்நடுவினிலுமமறைமுடியினிலும்நடமிடும்திருபத சேந்
ஏகபரம்மனேகமுமாய்நல்யோகமாய்ச்சிவலோகமுமாகிய சேந்
மாமேலெத்திய அசுரர்கள்குலமறவேலேந்தியமருமலர்க்கரமுறு சேந்
கலைகற்றிடுமுனிவர்களுளமதில்நிலைபெற்றிடுசரவணபவகுரு சேந்

சரித்திரவகை—அகவற்பா.

திருவளர்கமலச்செங்கண்மாலயனும்—தருவளர்விண்ணோர்களமியு
மறியாப்—பரங்கரவலைந்தபுராதனன்விலைச்- சங்கரன்கபலத்தாளருள
டைந்து-நற்கதிபெற்றநவிசிறுத்தொண்டர்—பொறகதையதனைப்புகன்
றிடக்கேளீர்-கோபமிலாச்செங்கோலதுசெலுத்தும்- காடவமன்னனன்க
ளிதேடும்அனுக்கா—நியேபடைக்காதரும்பகைவர்களை—யூகையாய்வெ
றேபொழுதுமொருநாளில்- சிவனடியார்க்குத்தினம்பத்திசெய்யும் — விதி

மேபுரியுந்தவமெனக்கொள்ளும்-பத்தியையறிந்தபணிந்துசெவித்து —
நித்தியம்வாக்குநேயமென்றறியாச் - செய்பிழையனைத்துஞ்சிந்தையிற்
பொறுத்துப்-பொய்யனேற்கன்புபுரிந்தருளென்று- வாகைசேர்காடவ
மன்னவனுஞ்செங்—கோகனகத்தாள்குனித்துமேபணிந்து — போற்றி
யேவேண்டும்பொருளினையளித்துச்-சாற்றியமலைச்சுகசாந்தநானென்
று—விடைகொடுத்தருளவீட்டினிற்சென்று-படையினில்வென்றபாரஞ்
சோதியாரும்-சிறுத்தொண்டரென்னுந்திருப்பேயரடைந்து—சறுத்திடு
ங்கண்டன்கனவடியார்களுக்-கன்னமுன்னளிக்கவடியவர்புசித்த-பின்ன
ர்தானருந்தும்பெரியதோர்விரதம் -பூண்டவப்படியேபோக்கிடுநாளி
ல்-ஈனமேமோர்தினத்தின்ஈசன்றனடியார்-வரவுராறுடல்வருந்தியே
யெங்கும்—விரவியேதேடிவினவிடும்போதில்— அங்கணன்றொண்டரன்
புசோதிக்கத்-தங்கியவயிரவர்தன்வேடங்கொண்டு-பசியினிலிளைந்தபா
ன்மைபோல்வந்து-வசையறவெனதுவன்பசிதீர்க்க-வல்லையோதொண்
டர்வாகுடன்விரைவாய்ச்—சொல்லையோவென்றுசோதியார்விளம்ப—இ
ன்னமுதளிப்பேனெழுந்தருளென்று- நன்னயமொழியானவின்றுமே
வணங்கப் பாருளோருண்ணும்படியினிதருநீதாம்-ஏருடனுனைத்தாலி
யயல்லாயோ-பத்தனேயென்னப்பரமனைவணங்கி- வித்தகாவெநாவிரு
ந்கள்கேட்டாலுஞ்—சித்தமேகளிக்கச்செய்திடவல்லேன்- அத்தனேய
ருளென்றடிபணிந்தேத்த-மறையவர்குலத்தில்வயதைந்துளதாய்ச்—
குறைவிலாதுறுப்பிற்குடிக்கொருபிள்ளையாய் - கல்வொருமனைந்துக
ற்றபுத்திரனைத்-தலையன்னைபிடிக்கத்தந்தையுமறுத்துச்-சந்தைவசமறிவச
ண்மத்தநற்கறிகள்—மிஞ்சவேயளித்தாலியாமுண்போம்—என்றிடு
ம்வயிரவரிணையடிதொழுது—நின்றிருவுளத்துநினைத்தவப்படியே— சிறி
யேனுய்யச்சிறுபொழுதிருந்தால் — நெறியுடன்செய்துநிமிடத்தில்வரு
வேன்—ஐயனேயென்றங்கடிமலர்வணங்கிப்- பொய்யிலாமனைக்குப்போ
ய்மனையாளுடன்—நடந்தகாரியத்தைநவிலவுண்மகிழ்ந்தே-அடர்ந்தமுரு
கசீராளனையறிந்து-சமைந்தநற்கறியைத்தாரிடுவோம்நீர்- இமைக்குமு
ன்பள்ளிக்கூடத்துக்கேகி-மதலையையழைத்துவந்திடுமென்று-விதவமி
ல்லாமல்விளம்பிடமனையாள்—அப்படிதானேயனிசிறுத்தொண்டருங்—
கொப்பெனப்பள்ளிக்கூடத்திற்கேகி- அழகியசீராளனைக்கொணர்ந்துட
னே-விரைவிலீராட்டிவெண்ணீறுசாத்தித் - தாய்மடியிருத்தித்தாள்கர
ம்பிடிக்க-நேயமாய்த்தொண்டர்நிமிஷத்திலரிந்து- பலவிதக்கறிகள்பண்
ணியபின்பு-நலமதாய்முனிவரைநண்ணிசேவித்துத்- தேவரீர்சொன்ன
திருவுளப்படியே- தாவறுங்கறிகள்சமைத்தினிதாச்சு — தெழுந்தருள்
செயுமெனஇறைவனுமெழுந்து- செழுந்திருச்செல்வன்தேடியுமறியா
ப்-பங்கயப்பதந்தால்பாரினினடந்து-பங்கனமுலவுமனையினிற்புகுந்து-
இட்டபீடத்திலிருந்துமேயிலையில்- யிட்டநற்கறிகளியாவையும்நோக்கி
ப்-பலவிதக்கறிகள்பரிமாறிடுமென்ன—தலைக்கறியில்லாச்சங்கையாலருந்
தேன்-அன்பனேயென்னஅடுத்திடுமனைவி- நன்முகநோக்கச்சந்தனநங்
கை-யடிபணிந்தேத்திப்படியவள்சமைத்துக் -கடுகியேவைத்தேதலைக்கறியி
தோவென்னத்-தொண்டருகங்கைத்துணைபுமகிழ்ந்து- இன்னடைச்ச

டையோன் இலைதனிற்படைக்கப்-பார்த்துமேபரமன்பரிவுடனுமது-ஏற்றநற்சிறுவனில்லாமலுண்ப-தில்லைநாமென்னவிளங்கியேபோற்றி-இல்லைவாழுமூதேசிறுவனிங்கேது-பயிரவதேவர்பரமனேயென்று- செபிரறவணங்கத்தெருவினிற்சென்று - பெயரினைச்சொல்லிப்பிசகிடாதழைத்தால்-அயர்வறுமைந்தன்அன்புடன்வருவான்-செல்லுவீரென்றுசெப்பியம்முனிவன்-ஒல்லையிற்படைத்தவொண்கறியனைத்தும் - பழையதோருருவாய்ப்பண்ணியுமுயிர்தந்-தழகியசீராளன்றனையனுப்பிச்-சேணிடைமறையச்சீராளன்றன்னைச்-காணிடமகிழ்ந்துகனிவினுற்றாயும் - தந்தையுமுவந்துதனயனையழைத்து-வந்தபின்வந்தவயிரவர்தம்மைக் - கண்டிடாமையினாற்கவலையிலழுந்தித்-தொண்டருநங்கைத்துணைவியும்பிரங்கிப்-புலம்பிடும்போதில்புனிதனுமுமையும்- நலம்பெறவிடைமேனண்ணியேகாட்சி-கொடுத்துநற்கயிலைகொண்டுசென்றேகி-அடுத்திடுகம்மோடணுகிடாயென்ன-அரனுமேயுரைக்கஅணிசிறுத்தொண்டரும்-விரைமலர்க்கோதைவெண்காட்டுநங்கையுஞ்- செல்வமேயுற்றசீராளன்றுனும்-நல்லசீர்சந்தனநங்கையுங்கூடிக்-கயிலையில்வாழுங்கதையைவிலாசமாய்-வெயின்பதியனுகிவிளங்குகோபுரமும்-திருவிழாவயருஞ்செய்யவாலயமும்-மருவியமணியால்வயங்கியமாடமும்- பூங்கமலஞ்சேர்பொய்கையுந்தடமும்-சாங்கமாய்வேள்வியுஞ்சாலையுஞ்சோலையும்-ஆகமவேதமறைந்திடுமொலியும்-யோகமார்முனிவருறைந்திடுஞ்சாலையும் -நிகழ்திருமடமுஞ்செழித்துநெருங்கும்-புகழ்பெருவளஞ்சேர்புரசைமாநகரில்-அண்ணல்சேர்சோலைவேளாளர்தங்குலத்தில் - நண்ணியபரசுராமனிண்டுரைத்தான்-குலாவியபாட்டிற்குற்றமிருக்கினும்-புலவர்களிரங்கிப்பொறுப்பதுகடனே.

சுந்தரக்கணபதிவருகிறபொதுவிருத்தம்.

முனிவருமறியாமூலாதாரத்தின்மூர்த்தியாகி
இனியவேழுலகோவேண்டுமின்பவிடளித்தொப்பில்லாத்
தனிவருநாதியாந்தங்கதையைவலஞ்செய்தேமாங்
கனிபெறுஞ்சுந்தரப்பொற்கணபதிதான்வந்தாரே.

சுந்தரக்கணபதிவருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

சுந்தரக்கணபதிவந்தார்-தொந்தோம-திந்தோமென
சுந்தரக்கணபதிவந்தார்
சுரர்க்குநரரெவர்க்குந்ததத்துவமெய்க்குயிராகியும்யாவர்பெற
கோடியிற்பலவெனமுடிவித்திடுகல

அநதரத்துமிருந்தாதுந்துபியேமுழக்க
ஆகமவேதமனேகம்பணியிழைக்க
அடியவரிருவினையடியொடுபொடிபட
வடிவுளகருணைசெய்திடுமொருகசமுக சுந்த

மூலாதாரப்பொருளாயிருந்தவர்கலை
முனிசித்தர்கண்மாதவர்க்குமாபன
நிலைபெற்றிடுபோதசத்தையேயருள் மூலர்

முறையுடனெழுகுலதயிர்பாலிடமிரு
கருவினைகெடநல்திருவருள்பெருகிடு (வர்
மூலாதாரப்பொருளாயிருந்தவர் இந்தமூவுலகெங்கும்நானாய்நிறைந்த
நாலாசலையுமுனம்பகர்ந்தவர்எழில்நாதமுடிவில்நடம்புரிந்தவர் சுந்

வாலாஞ்சிவபோகவேந்தேகி அனந்தமாகியிருந்தயோகி
தனைவணங்குடன்பர்கலியைபாடிடுங்கருத்தாகி
மாசகற்றிடுமேனியிற்பொடிபூசுமுககனுமேசுடர்செய
வாசபொக்கிடுராலைநற்புரிதிக்கிட்டேவைநத்து
மயக்கமறுதந்நீளர்கெரிசிந்துத்தனிமைசமாமுற்றவளித்திடுபுபுந
மணிச்சிலம்புசிறுசதங்கைமருவிடு
மிருபதங்கள்கலகலென்றுமொலிசெய சுந்தர

கட்டியக்காரன்வருகிறபொருள்விருத்தம்.

எச்சலைசனுமுனைக்கேயெழின்மறைநாலுந்தேர்ந்தே
மிக்ககாடவராசேந்திரன்விரிந்தாடபுகழைப்பாடி
துக்கமில்லாமலென்றுஞ்சுகித்தயேன்மேனுமாவாழந்
தக்சகட்டியக்காரன்முன்சபைதனில்வருகின்றனே.

கட்டியக்காரன்வருகிற—தரு—இ-ம்—பந்துவராளி—ஆதிதாளம்.

கட்டியக்காரன்வந்தான்—மிகு—அரசர்கள்சபைதனில்
கட்டியக்காரன்வந்தான்
குட்டிச்சிங்கம்போலசிறிக்கிட்டியாட்டிக்கொண்டு
கொழுந்துபதிபுரியுமபரனடிமை
விழுந்துபலமுறைபெழுந்துதுதிசெயும்

காசினியாளும்போசன்காடவமகாராசன்
வாசலிறகாவற்காரன்மலிந்தபோரினில்வீரன்
தேசத்துளதிகாரன்செழித்தமகாவுதாரன்திரம்நதசிங்காரன்
விசும்புகழ்ப்பிரகாசன்மணைந்ததாரன்
மிகுந்தபகைவர்களைவருமருகிட
தொடங்கிச்சதுர்விதவகைதனில்வெலுமொரு கட்டியக்

சக்கரப்பாகைகட்டிதனித்ததிலதக்கிட்டி
தக்கசட்டையுஞ்சிட்டிதழைத்தநிசாருமாட்டி

பங்கன்றுரிமைச்சூட்டிபல்லயங்கையிலிட்டிபணிகள்மிசவும்பூட்டி
உகந்தகாடவமன்னனுபாந்தபுத்தைநாட்டி
ஓங்குமலையெனவணிகருபுயமோங்
பூங்கமலமெனவளர்திருமுகமுள — சட்டியக்

வணங்குமவர்கணத்தொண்டன்பதியாதவர்க்குமிண்டன்
குணக்குலாவியதண்டன்கூறரியபிரசண்டன்
இணங்குமவர்க்குத்தொண்டன்இடிபெரியவுத்தண்டன்இறைவன்காரி
பணைக்கொளொருபொரசட்டாய்-பார்த்தி[illegible]பனைவரிபன்
பரிந்தபலவிதகலைகளுமினிதறிய
தெரிந்தவனைநகரினில்புகழ்மொழிபெறவிய — சட்டியக்

சட்டியக்காரன்-எச்சரிக்கை.

நிதிபதிபுவிமன்னவரிறைஞ்சிடநீறுலகாள்வேந்தன்
நிலவியசபைதனில்வருகிறவேளையிங்கிதனைடவெனச்சரிக்கை
விதிபதம்பெறும்பாதகனிளங்கியேவிளமாமோதமெனவிய
விளங்கும்பயிட்டிடாளிசெய்திடவிருடனெச்சரிக்கை
சோதிதருங்கலைமாமைகளெட்டிடுங்கோரணமுங்கட்டிக்
சுந்தரமலர்மாலைகளோத்துத்தாகரும்துணியுடனெச்சரிக்கை
ஆதிபதாதிப்பாதியாபயம் அருதிமுமுப்பணியும்
அணிவன்திராபரணங்களணிந்திட அகமகிழெச்சரிக்கை

இராசன் வருகிறபோது-விருத்தம்.

பொருதுசேவகியர்கள்சூழப்பெரியசாமந்திரிகளுடை
மருவுமந்திரிகள்சேரவருசவிவாணர்பாடத்
திருவளமாம்பத்தாறுதேசமன்னவர்நெருங்கச்
சருதியேசொல்லுவிருக்கசாகாடவராசன்வந்தான்.

சட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோசெப்படியென்றால் இக்கஉலகமெல்லாம் ஒருகுடையில்ஆளப்பெற்றஇராசராசேஸ்வரராகிய காடவமகாராசன்தன்னுடைய கொலுவுக்குவருகிறவிதங்காண்க.

இராசன்வருகிற-தரு-இராகம்-அடாணா-தாளம்-திரிபுடை.

ராசராசர்தம்புகழ்பு-அரங்கன்-உபர்துங்கன்
காடவராசன்வந்தான்
மிசுகதிரொளிமணிமுடியிலங்க
மிக்கலைபெருகுமணந்திட பக்கந்தினின்மந்திரிநெருங்கிட — ராச
முரசஞ்சல்லரிசங்கம சுரமண்டல-முரிகளமிர்தங்கம்
இசைசெய்துத்துமியுரைசெய்தம்புரு
எந்திசகுமொலித்துவழங்கிட-சுற்றிக்கடலொத்துமுழங்கிட — ராச
வங்கர்சிங்களர்கலிங்கர்-தேசதேசத்து
மன்னர்கற்றைடாதெலுங்கர்—தங்கவிடமிலாதெங்குமுலவிட
சடைப்புலிசேனைகள்பின்செலபட்டக்கரியானைகண்முன்செல — ராச

மாதாகவரிவிச—மறையவாசல்-மனுநெறிதழைப்பபேச
போதகமுனிவர்கள் நீதிக்கேசொல
போகத்திற்கிந்திரனுமாக—வாகத்திற்சந்திரனுமாக ராச

கட்டியக்காரன்போற்று கவி.

குஞ்சரத்திரள்கோடியிற்சிலதுநேரிட்டருமுளைக்கஜத்தோடவே
குதிரைகளுமகவெகுவாக்கடிவாளமறுபட்டுக்குடுக்கிவிட்டோடவே
வஞ்சமில்லாத்தேரில்மருட்டவர்த்தனரேறிவாகாய்நடாத்திவரவே
மதியமந்திரிமாரசனிருபகமமுஞ்சூழ்ந்துநலமதுநூல்படித்துவரவே
கஞ்சமுளமடமங்கையார்கள்சாய்மனைபோடசவிவாணருமபாடவே
சுந்தரியபல்லாண்டுசேசுபணம்பாடவேகணிமொழியார்நடனமாட்டு
தஞ்சமென்றடிதாழ்ந்துசகதவருவணங்கவேதனிகருடையினீழலைவா
க்,தனியாளுஞ்சாட்டவமகாராசனேபாததாமரைகள்போற்றிபோற்றி.

இராசன்போற்றுகவி.

போதநான்மறைதழைக்க பொருந்துசாஸ்திரிகள்வாழ்க
மாதமும்மாரிபெய்யவளரறம்பெருகநாளும்
நீதிசெங்கோல்நடக்க நீண்மனுநீதியோங்க
ஆதிருமேலசர்செய்ப வடியிணைபோற்றிபோற்றி.

முதல்மந்திரிபோற்று-கவி.

பணிமதிநிலவுபசடையரனிணையடி பணிபுரிசாதகலவே
பகைமனரடிதொழுவொளிசெயுமனுமுடிபடிமழவிருபதனே.

இரண்டாவதுமந்திரிபோற்று—கவி.

தொனிசெயுமலைகடலெனமுரசொலியதிர சுகமனையுடையவனே
சுழியுளமுரவிகள்விடுமணருமமாகள் சுடர்மகுடமுடையவனே

மூன்றாவதுமந்திரிபோற்று—கவி.

முனிவுளமதசரிவிவரயலவரசர்கள் முறைசொலியனிபவனே
முதுமறையவர்மகபதியுயர்புகழ்பெருமுழுநகருடையவனே

நான்காவதுமந்திரிபோற்று-கவி.

இனிதிவரிசெலிவர்மிடிகெடவருளிதியிசைபுகழுடையவனே
எதிரிலையெனவொருகுடைநிழலரசுசெய்யிறையுனதடிபோற்றி

இராசன்நீதிவிசாரணைசெய்கிற—கவி

உலகெலாமாதமும்மாரிபிசகில்லாதொழுங்காப்பபொழிந்துவருதா

மந்திரி

உயிர்மண்டலேஸ்வராமாதமும்மாரியுமொழுங்காய்பபொழிந்துவருது

இராஜன்

இலகுமந்தணர்வேள்விநான்மறைகள்சக்கிரமமுமினமாய்நடந்துவருதா

மந்திரி

எதிரிலாமன்னவர்கள்வேள்விமறைசக்கிரமமுமினமாய்நடந்துவருது.

இராஜன்

தலமாஞ்சிவாலயம்அரியால்யமபூசைதாழ்வில்லாமல்நடக்குதா

மந்திரி

சக்ரேஸ்வராவுள்ள ஆலயமெலாம்பூசைதாழ்வில்லாமல்நடக்குது

இராஜன்

குலமானநால்வகையினுசீர்மங்கிரமமாய்க்குறைவிலாமனடக்குதா

மந்திரி

குலமேதகாரநாலுஆசிரமங்கிரமமாய்க்குறைவிலாமனடக்குது

இராஜன்

தேசமைம்பத்தாறிலுள்ளமன்னவர்களுந்திறைதிரவியமவந்ததா

மந்திரி

செகநலம்புகழுமார்த்தாண்டமன்னவர்களுந்திறைதிரவியம்வந்தது

இராஜன்

கோபெரியோர்தினஞ்சாஸ்திரமுணர்ந்தநிலைப்படிநடக்கிறரா

மந்திரி

நித்தியப்பெரியோர்கள்சகலகலையுங்கற்றுநிலையாய்நடக்கிறார்கள்

இராஜன்

வாசமாய்ப்பகைகளில்லாமல்புலியும்பசுவும்வழியவதுவாடிவருகுதா

மந்திரி

மன்னனேபகைகளில்லாமல்புலியும்பசுவும்வலியவதுவாடிவருது

இராஜன்

ஞாசிலாப்பயிற்செய்துநாட்டில்வாழ்குடியெலாஞ்சுகமாயிருக்கிறதா

மந்திரி

சதுராசிரீகத்திரநாட்டில்வாழ்குடியெலாஞ்சுகமாயிருக்கிறார்கள்

இராசன்வசனம். ஆறைச்சந்தோஷம் சந்தோஷம்மந்திரிகளே.

பரஞ்சோதியாருக்கு காடவராசன்சொல் விருத்தம்.

பரமிசைபுகழ்பெற்றோங்குநற் பரஞ்சோதியாரேகேளீர்
வடதிசைநன்னின்மேவும்வாதாபிமன்னனம்மை
அடைவுடன்மதியானமேராசகக்கிக்கடங்காளீர்போய்
படையுடனவனைவென்றிப்பதியினில்வருகுவீரே

வசனம்.

ஓ—நேர்பரஞ்சோதியாரே அந்தவடதேசத்திலிருக்கும்வாதாபிராசனையன் நமக்கு ஆக்கினைக்குள்ளடங்காமலும் பகுதிபணங்கட்டாமலு மிகர்வங்கொண்டு நம்மைமதியாமலிருக்கிறான் ஆகையால்நீர்போய் அவனைவென்றுவாரும் பரஞ்சோதியாரே.

பரஞ்சோதியார்சொல்-விருத்தம்.

கடலுலகெலாப்புரக்குங்காடவர்கோவேகேளும
அடல்கொள்வாதாபிமன்னனவனைநெடியபோர்புரிந்து

தடையறச்செயித்தேயுந்தன்றனிணேவணங்கப்பண்ணித்
திடமுடன்பகுதியாவுஞ்செலுத்திடச்செய்வேன்மன்னே.

வசனம். கேளுங்காடவமகாராசனே உனதுகட்டளையின்படியே அந்தவாதாபிதேசஞ்சென்று அங்கேயிருக்குமிராசனையும்வென்றுஅவன்நமதாக்கினைக்குள்ளடங்கும்படியாகவும் பகுதிப்பணங்கட்டும்படியாகவுஞ்செயம்பெற்று வருகிறேன்மகாராசனே.

இராசன்வசனம்.

அப்படியேபோய்வாரும் பரஞ்சோதியாரே.

இராசன்-மந்திரிக்குசொல்-விருத்தம்.

நண்ணுமந்திரியேகேளாய்நாடகசாலைவாழும்
இன்னமென்முலையார்பச்சைக்கிளியெனும் மொழியார்தம்மிற்
றின்னமாயொருத்திதன்னைச்சீக்கிரமாயழைப்பித்தேயிப்
பண்ணைவாநிசாபிரசப்பரதநாடச்செய்வாயே.

வசனம். கேளும்மந்திரி நாமிச்சபையில்சகலராசர்களும்வந்து கூடியிருக்கிறபடியினாலே எல்லோரும்பார்த்து அதிசயிக்கும்படியாக நாடகசாலைப்பெண்களையழைப்பித்து நாட்டியஞ்செய்விப்பாய்மந்திரி (அப்படியேயல்லதையாசுவாமி)

மந்திரிசொல்-விருத்தம்.

நின்றிடுஞ்சேர்வைக்கெல்லா நிருமித்தசேர்வைக்காரர்
சென்றுநாடகசாலைக்குத் தெரிவையரநேகர்தம்மிற்
குன்றெனுமுலையாள்கிதக்குயின்மொழியொருத்திதன்னை
இன்றுநீயழைத்துவாரா யிக்கணந்தன்னிற்றானே

வசனம். ஆரடாஅடா சேர்வைக்காரா நமதுமகாராசாவுக்குப் பரதநாட்டியம்பார்க்கச் சித்தமாயிருக்கிறபடியினால் நாடகசாலைக்குப்போய் நாட்டியப்பெண்ணை அழைத்துக்கொண்டுவாடா (அப்படியேஅழைத்துக்கொண்டுவருகிறேன்சுவாமி)

நாட்டியப்பெண்கள்வருகிற-பொதுவிருத்தம்.

முருச்செறிதிதழானில ருசிலெனுங்குழலாளல்ல
சருக்கரைமொழியாள்செய்ய தாமரைமுகத்துநல்லாள்
திருக்கில்செங்கோல்செலுத்துஞ் சிறுமராசன்முன்னே
தருக்கியேநடனமாது சபைதனில்வருகின்றாளே.

கட்டியக்காரன்-வ-ம. அகோதெப்படியென்றால் ராசராசனெனியகாடவமகாராசன்சபைக்கு நாட்டியப்பெண்கள்வருவிதங்காண்க.

நாட்டியப்பெண்கள்வருகிற-தரு-இ-ம-புரிகலியாணிஆதிதாளம்
நளினமுகமலரிலணிபதிகருப் விழிநடனமாடும்பெண்வந்தாள்
கிளிபகருவசன மதுரமுறுவசனி
மேல்மேலும்பதினாலுலகும்புகழ்காரபோலுங்குழலாண்மகிழுந்திறி
போதகாமமீறுமாகிலாமலர்பாதமேவுசிதமீடுபரிபுர — தகதா
தங்கக்கலசமிருகொங்கைதயங்கிமயங்கிவயங்குநயங்கொள் — தங்கக்
தகதமென்றுமினிமினென்றுகதிமேனி
நிகரிகென்றுவடிபாந்துகுவிகரு — தங்க

தட்டிபடித்துகதித்தவனற்புடமிட்டுநயக்கிணக்கியேமெருகிடு
தங்கக்கலசமிருகொங்கைரதிதானேவென்றிடுங்கண்டால்சங்கை
மங்கைப்பருவமடமாதர்களில்ரம்பை
மவுனமுனிவரெதிர்வருகின்மிகமயலி
லுருகிவிழிபருகியுளமதுகளிபெறு நளினமுகமலரி

போற்றி—கவி.

ராஜமானியகெம்பீரராஜபூசிதமார்த்தாண்ட
ராஜசேகராராசேந்திரமகாராஜராஜர்கோவே
வாசமாய்கொலுவுக்கிப்போவரச்செய்தசேதிசொல்லுந்
தேசமேபுகழுஞ்செய்ய திருவடிபோற்றிபோற்றி.

வசனம். தேவரீர் அடியாளையழைப்பித்தகாரியம் திருவுளம்பற்ற வேண்டுமையாசுவாமி.

மந்திரிசொல்—கவி.

சுரலயகியானசாரந்துளித்திடக்கிநம்பாடத்
தாணிமன்னவர்களிக்கத்தாளமத்தளமொலிக்கக்
காமபிநயமுங்காட்டிக்கண்ணொளிசெவியிற்பாயப்
பாவுமிச்சபைமுன்மாதேபரதநாட்டியஞ்செய்வாயே.

வசனம். கேளும்பெண்ணே இப்போநம்முடையகொலுவில் சகலராசர்களும் வந்திருக்கிறபடியினால் எல்லோருங்கண்டதிசயிக்கும்படியாய்நம்முமகாராசாவுக்குமுன்னேபரதநாட்டியஞ்செய்வாய்பெண்ணே (அப்படியேசெய்கிறேன்சுவாமி)

பொது-விருத்தம்.

முச்சகத்தோர்பிரமிக்கு மோகனமுசவிலாச
நச்சுவேல்விழியார்தெய்வ நங்கைமாருங்கொண்டாட
மெச்சுங்காடவமாசேந்திரன் விபன்கொலுவினிலிப்பாவை
பச்சிளமயில்போலாடும் பரதநாட்டியத்தைப்பாரீர்.

சட்டியக்காரன்—பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் சகலராசாக்களும் வந்துநெருங்கியிருக்கின்றகாடவமகாராசன் கொலுமுகத்தில்நாட்டியப்பெண்ணானவள் பரதநாட்டியஞ்செய்கிறவிதங்காண்க.

பரதநாட்டியஞ்செய்கிற-தரு- இ-ம்-புன்னாகவராளி-தாளம்-அடதாளம்

ராசாதிராசமகாராசயோகனேகலவிகசிதவதிவிதரண குணசுபகர (ராசாதி) ஆசாபாசங்கடந்தநேசானுபூதியர்விஸ்வாசா அகண்டமண்டலேசாஞானப்பிரகாசா இப்புவிபாவுமழகுற்றிழகுபாடவநற்புறுமாரனை நிகர்பொற்புலவுங்காடவ(ராசாதி) கொங்கணர்—பாஞ்சாலர்—குருநாடர்—கோசலர்—தெலுங்கர்-அங்கர்-கலிங்கர்-குலிங்கர் வங்கர்-மாகதர்—காஸ்மீரர்—தங்குமாரியர்-கேகயர்—வைதற்பர்சோனர்—காம்போஜர்-சிங்களர் - சாளுவர்-குடதேசர்-சீனகர்-காந்தாரகர்- சங்காழிசூழுஞ்சதுர்த்தசபுவனத்தோர்சூழ்ந்த-சிங்காதனத்திலிருந்து செங்கோனடாத்தும்வேந்தடாதவிகடகாடகேசதாரகதமொடு படையணிவகைபுடையுரவருமொரு

சத்துருவைசெயமுற்றெழுவிக்கிரமபற்பல சிறகலைகற்றுணர்விற்பனச
துராவிதுராசமுகாசுமுகாதருணமீதுகனகாதியெலாமிகஅருளுவாய்பூமி
பகோடிசலாமக(ராசா)

இராசன்—விருத்தம்

நீதிமந்திரியேகேளீர் நிறைந்தவிக்கொலுவின்றன்னே
ஆதியாய்த்தொடங்கிநிர்த்த மாடியபெண்சனக்கு
நீதிலாபரணவஸ்திரந் திரவியமிவையுமின்னும்
சோதிமாமணியுநீந்து சொகுசுடனனுப்புவீரே.

வசனம். கேளும்மந்திரி நம்முடையசபையில் எல்லோரும்பார்க்க
அதிசயிக்கும்படியாய் நாட்டியஞ்செய்தபெண்ணுக்குநூசகலவஸ்திராபா
ரணதிரவியங்கள் கொடுத்தனுப்புமந்திரி (அப்படியேகொடுத்தனுப்புகி
றேன்சுவாமி)

இராசன்—விருத்தம்.

பகைவரைசெயிக்கப்போன பரஞ்சோதியென்பாருக்குத்
தகைவுடனேநடந்த சங்கதிதெரிந்ததாயில்லை
மிகையுடனிவரையந்த மேவலரொன்செய்தாரோ
சுகமுடனிருக்கின்றாரோ சொல்லுவீரமைச்சமாரே.

வசனம். கேளும்மந்திரிமார்களே நமச்சுசத்துருவாயிருக்கிறபேர்
களையெல்லாம் செயித்துவரும்படியாய் முன் படையெடுத்துப்போயி
ருக்கிற நமது அனுக்காராகிய பரஞ்சோதியாருடையசெய்தி இதுவரையும்
ஒன்றும்தெரியவில்லையேயென்ன சொல்லுகிறீர்கள்மந்திரிகளே.

முதல்மந்திரி-விருத்தம்.

பேரிகைமுழங்கக்கீதம பெருகுவாத்தியங்களார்ப்ப
வாரிபோற்சேனைசூழ பாக்கரிதேர்களோடும்
பாரியநிதியங்கொண்டு பகைவரையுஞ்செயித்தே
தாரணிபுயந்தாரிதோ சமீபமாய்வருகிறாரே.

வசனம். கேளுமகாராசனே நம்முடையபரஞ்சோதியாரானவர் அந்
தவடதேசமெல்லாஞ்செயித்தும் சத்துருக்களை ஜெயம்பண்ணிசகலசே
னைபரிபாலனங்கள்படைசூழ மகாசெயப்பிரதாபத்துடனே இதோசமீ
பத்திலவந்துவிட்டார் அதோபேரிகைமுழங்குகின்றது பாருமகாரா
சனே.

பரஞ்சோதியார்வருகிற-பொது-சவி,

மேதினியாண்டிருந்த மிகுந்தகாடவராசேந்திரன்
நீதிபேவலினுற்சேனை நிறைவடதேசஞ்சென்று
'போதசத்துருவைவென்று பொருளனேகங்கொணர்ந்தே
சூதிலாவனுக்காரொன்றே சொலும்பரஞ்சோதிவந்தார்

கட்டியக்காரன் வசனம்.

அகோதெப்படியென்றால் இராசராசேசுவரனாகிய காடவமகாரா
சன்ஏவலினாலேஅந்தவடதிசையிலேசத்துருசெயம்பண்ணிவந்தபோயி

நந்த அனுக்காரராகிய பரஞ்சோதியார் கொலுவுக்குவருகிறவிதங்காண்க
பரஞ்சோதியார்வருகிற-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பரஞ்சோதியார்வந்தார்-மன்னர்சபைக்குப்-பரஞ்சோதியார்வந்தார்
நிரஞ்சனமாகவெங்கும் நிலவிப்பூரணமான
பரஞ்சுடரினையல்லும் பகலுந்தொழுமெஞ்ஞான பரஞ்

வேதசாஸ்திரம்படித்தே—அகில
விளம்புநன்னெறிகளைப்பிடித்தே
நீதிமனுவின்நூலாம் ஓதிமிகவுணர்ந்து
நிலைந்தவுலகில்புகழ்சிறந்திப்பெயரணிந்து பரஞ்

ஆனைகுதிரையேற்றந்தெரிந்தே—உப
சாயுதத்தொழில்களறிந்தே
சேனைக்குளதிகாரிதேடிப்பொருளைவாரி
ஆனவாத்தியமாப்பாமுழங்கத்திர பரஞ்

வாதாபிதேசத்திற்சென்றே—அங்கு
வைகுமன்னனையண்டிவென்றே
கோதிற்கரிகள்கோடிகுதிரைகள்பலகோடி
எதிலொட்டகங்கோடிலபிகநற்பொன்கொண்டோடி பரஞ்

பரஞ்சோதியார்சொல்-கலிவிருத்தம்.

பொன்னுலகம்புகழும்—இந்நிலமதுமுழுதும்
என்னையுமுடனாளும்—மன்னவர்மன்னவனே

இராசன்—வசனம். வாரும்வாரும்பரஞ்சோதியாரே உமதுக்ஷேமமே. என்ன நீர்போனகாரியமென்ன தெரியச்சொல்வீர் பரஞ்சோதியாரே.

பரஞ்சோதியார்—விருத்தம்.

வடதிசைதன்னில்வாழும வாதாபிதேசமெல்லாம்
கெடவரசனையும்வென்று கிளர்நற்சேனையுஞ்செயித்துக்
கடகரிகுதிரைசெம்பொற் கனக்குவைகளுங்கொணர்ந்தேன்
இடமுளபுலியையாளு மிறைவனேயிறையுளானே.

வசனம். கேளும் மகாராசனே வடதிசையிலே ஒருவராலும்செயிக்கக்கூடாமலிருந்த அந்தவாதாபிதேசமுழுமையும் நான்யுத்தமிலேல வாதாடிசெயித்து அந்தஅரசனையும்வென்று அவன்நகரத்தினைக்கடந்தெப்பகுதிபணங்கட்டுமபடியாய் செயம்பெற்றுவந்தேன்மகாராசனே.

இராசன்—விருத்தம்

ஒருவருமவன்பாலேசெயித்தியஞ்செயமாட்டாமல்
வெருவியேமீண்டுவந்தார் மேவியேவென்றுபின்னும்
மறுவலர்வணங்கச்செய்து மாநிதிகொணர்ந்தாயுன்றன்
பெருமையையென்னசொல்வேன் பெரும்பரஞ்சோதியாரே.

வசனம். கேளும் பரஞ்சோதியாரே ஒருவருக்குமடங்காத அந்த வாதாபியைசெயித்து அவன்தேசத்தையுங்கைக்கொண்டு, சகலமுங்

மூடையவசமாக்கி அளவிறந்ததிரவியங்களையுஞ்சம்பாதித்துவந்தீர் ஆ-ஆ-உமதுசெயப்பிரதாபங்களை என்றற்சொல்லிமுடியுமா உம்மாலல்லவோ எனக்குச்சகலதேசங்களுங்கைவசமாச்சுது பரஞ்சோதியாரே.

மந்திரி-விருத்தம்.

மன்னவர்மன்னகேளாய் வாய்ந்தவிப்பெரியோன்றன்னை
என்னவோவாரனுக்காரென்றே பெண்ணவும்வேண்டாமீசன்
தன்னிடமடியார்க்கன்பு சாலவுமபக்திசெய்வோர்
அன்னதோர்மகிமையாலே யரசனைச்செயிப்பதையா.

வசனம். கேளும் ராசபரமேஸ்வரா அந்தவடதேசமெல்லாம் செயம்பண்ணிவந்த இந்தப்பெரியோர்ஆரென்றநினைத்தீர் உம்மிடத்திலிருக்கப்பட்டவனுக்காரர்சளிவெருமொருவர்தானென்று நினைக்கவேண்டாம் ஆனால்இவர்சிவனடியார்களுக்கு நித்தியகாலம் அன்னதானங்கொடுத்துக்கொண்டுமகாபக்திமானாயிருக்கப்பட்டவர் அந்தமகிமையினாலல்லவோ சகலதேசங்களையுஞ்செயம்பண்ணிவந்தது மகாராசனே.

இரண்டாவது-மந்திரிவிருத்தம்.

எனக்குமேதெரியுமிந்த வெழிற்பரஞ்சோதியார்தாங்
கனபரம்பொருளையன்பாற் கருதியேயடியாருக்கு
மனக்குறைவிலாமலென்றும் வழிப்படுந்தொண்டரன்பில்
நினைக்கிலிப்பெரியோரன்பால் நிலைத்திலைமன்ற

வசனம். கேளுமையாமகாராசனே இவருடையமகிமையை நானுரைப்பேன் என்னவென்றால் சிவனடியார்களுக்குப்பத்திசெய்துவரப்பட்டபேர்களில் இந்தப்பெரியோருக்கு மிஞ்சினபக்தியுடையபேர்கள் இந்தவுலகத்திலொருவருமில்லையையா.

இராசன்-விருத்தம்.

இன்றுநாமறிந்தோமிந்த வெழிற்பரஞ்சோதியார்தம்
நின்றிடும்நிலையும்பத்தி நேயமுமீசன்தொண்டர்
கன்றிடப்பணிகள்கொண்டேன் கனத்தகுற்றங்கள்செய்தேன்
இன்றிதற்கென்னசெய்வே னிசைந்தமந்திரிகண்மாரே

வசனம். ஆ-ஆ-மந்திரிகளே ஓகோஇதுவரையிலும் இவருடைய மகிமையையறியாமல் இவரிடத்தில் நான் வேலைவாங்கிக்கொண்டேனே இந்தஅபசாரத்துக்கென்னசெய்வேன் மந்திரிகளே.

இராசன்-புலம்பல்-தரு-இ-ம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

நீதியாகிப்பரஞ்சோதியார்பெருமையை
நினையாமல்வெகுபணிகொண்டேனே
பாதிமதியணிந்தோனுதியடியரென்று
நீறுபூத்தகனல்போல்மாறுபடவிருந்தார்
நிலையறியாமற்போனேனரியோரே

ஆரியமனத்தாலும் கூரியவாக்காலு
மறியவாமென்றுரைபெரியோரே
அறிபலர்தமிந்தபெரியனையெப்படி
யடக்கமாகவைத்துக்கொண்டிருந்தாரோ
உரியவன்பாற்பெருமைதெரிவரிதென்றுமுன்னே
றுரைப்பதற்குச்சரியாய்ப்பட்டிருந்தாரோ
இந்தப்பணிகள்கொண்டமுந்துபழிகளுக்கே
யென்னபரிகாரஞ்செய்வேனோ
பந்தமாலபாசவினையின்பொருள்
பழிசுபந்தென்னமாயுய்வேனோ.

இராசன்-விருத்தம்.

நித்திலமருங்கல்வாழும் நீதிமந்திரிகளேகேளீர்
பத்திபாபன்பசெய்யும் பரஞ்சோதிபெண்யார்தம்மைக்
குத்திரமாகவேவல கொண்டுபணிகொண்டேன்
இத்தகைபழிசுமந்தேனினியிதற்கென்செய்வேனே

வசனம். கேளும்மந்திரிகளே அந்தஞானகடவுளை அல்லும்பகலும் இடைவிடாபத்திபாவிக்கின்ற பரஞ்சோதியாரை நயக்கேவலப்பணிவிடைசெய்யவைத்து நான்பிரமாதபாவத்தையேற்றுக்கொண்டேனே இதற்கென்னசெய்யலாம் மந்திரிசரே.

மந்திரி—விருத்தம்.

கூறியவடியாருக்குத்தங்கள்செய்தோமென்று
வேறுவேறெண்ணவேண்டா மிருந்தவுள்ளந்தெரிந்து
மீறிநீர்செய்கதில்லை மிகுகுறையில்லையாலத்தால்
தேறுவீர்தனையென்றுந் தீவினையில்லையன்றே

வசனம். கேளும்மகாராசனே நீர்மனமறிந்து இந்தப்பெரியோருக்கு ஓர்அபசாரமுஞ்செய்ததில்லையே ஆகையாலதற்குவியாகூலப்படவேண்டியதென்னமகாராசனே.

இராசன்-விருத்தம்.

அண்டையிலிருந்தநீங்க ளாகிலுஞ்சொன்னதில்லை
தொண்டவெப்பழிகளெல்லாஞ் சூழ்ந்தபின்சொல்லவந்தீர்
இண்டையுமருகுங்கொன்றை யிலங்கிடுஞ்சடையாருக்குத்
தொண்டரென்றறிந்தாலின்று சொலும்பழிகொள்வதுண்டோ

வசனம். கேளும்மந்திரிகளே எனதண்டையிலிருந்தநீங்களுஞ்சொல்லவில்லை முன்னே யிப்படியிருக்குமென்றறிந்தேனானால் இந்தக்கொடிதாகியபாவத்தை ஏற்றுக்கொள்ளுவேனோ மந்திரிகளே.

மந்திரி—விருத்தம்-

இரவியைக்கண்டால்சூழு மிருளெலாமகலும்போற்
கருதியகல்லைக்கண்ட காகங்களகலும்போல்
தெரிந்துநீர்குற்றமொன்றுஞ் செய்ததேயில்லையானாலும்
பரிந்தானடியைப்போற்றும் பவமெலாமகலுந்தானே

வசனம். ஆனால்கேளும்மகாராசனே நீரானமறிந்துசெய்தபிழை ஒன்றுமில்லை அப்படியிருந்தாலும் பரமசிவனைநிந்தியானப்பண்ணினதை அவர்களுடைய பாவங்களானது சூரியனைக்கண்ட இருள்கூட்டத்தைப் போலவும் எரிந்தகல்லைக்கண்ட சாககைக்கூட்டத்தைப்போலவும் தலைகாட்டாமல் ஓடிப்போமென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றபடியினாலே அப்படியே அந்தஒன்றுங்கடவுளைநிந்தியானப்பண்ணி இந்தப் பெரியோர்மகிமையையறியாமற்செய்த பிழைகளையும்பரிசரித்துக்கொள்ளலாம் மகாராசனே.

இராசன்-வசனம்,

ஆ-ஆ-நன்றாய்ச்சொன்னீர் நன்றாய்ச்சொன்னீர் பிராமணருக்குத் தெய்வமேசாட்சி அப்படியேசெய்வோம்மந்திரிகளே.

இராசன்பரமசிவனைத்தியானம்பண்ணினவிருத்தம்.

அளிபெருகியசோதியின்ப ஆனந்தப்பரமேபோற்றி
களிதருமடியார்க்கிரங்கும் கருணையங்கடலேபோற்றி
வெளிதனிலொன்றையைந்து விதமதாய்நின்றாய்போற்றி
எளியவன்பிழைபொறுத்தே யிரங்கிடுமெந்தாய்போற்றி

வசனம். ஹரஹரா சாளரண்டாதிதேந்திரசதாப்புரசபாபதிசமேதா எளியேன்செய்தகுற்றத்தைநீக்கி இரட்சித்தருளவேணுமநாதனே.

ராசன்தோத்திரஞ்செய்யுஞ்சந்தவிருத்தம்

விலையிலாதமணி முடித்தே விளங்குமாலிக்கச்சுடரே
கலைகண்மேவுமதிய முதே கருணைக்கடலோரணமே
தலையிலேபுனலிருக்குந் தாபதநம்பணிப்பரமே
மலைபோலவந்தபழிநீக்க மகிழ்ந்துமறையோடசிவமே

இராசன் பரஞ்சோதியாருக்குச்சொல்விருத்தம்.

பக்தமாயுற்றதேயாவதும் பரஞ்சோதியாயுமமை
புந்தியபிழைகொண்டாண்ட புடன்பகர்பிழைபொறுக்கீர
சிந்தையிலடியார்க்கன்பு செயமன்னைசேர்வீர்காளுநம்
கந்தமோனருஞ்செய்ய கமலசேவடிகள்போற்றி

வசனம். கேளுமையாபரஞ்சோதியாரேதவமாமுனிவரை இதுவரையிலுமறியேன் ஆசைபாற்சிறியோர்செய்தபிழையைப்பெரியோர் பொறுக்கக்கடமையென்று வேதசாஸ்திரங்களிற்சொல்லியிருக்கிறபடியினாலே நான்செய்தபிழையைத்திருவுளத்திலெண்ணாமல் என்மீதிற் கருணைகூர்ந்து இன்றுமுதல் அரண்மனையிற்றரிமையிருந்து உம்மெண்ணப்படியேசிவனடியாருக்கன்னதானங்கொடுத்துக்கொண்டு சுகமேயிருக்கலாம் நீரெழுந்தருளுஞ்சுவாமி.

பரஞ்சோதியார்-சொல்விருத்தம்.

இப்புவிதனைமுழுதும்ஒப்பரவேயாளுமம
மெய்ப்புகழ்சோராசேஅப்படியேசெய்வேன்

வசனம். கேளும்இராசனேஒருதுறையும உமதுசிந்தையில நினைக்க வேண்டாம் ஆனால்உமதுமனதின்படியே சிவனடியார்களுக்கு அன்ன

தானங்கொடுக்குஞ்சட்டியாய் நான்போய்வருகிறேன்செலவுகொடுக்கனு
ப்புமையா(சானைச்சாண்)அப்படியேபோய்வாரும் பரஞ்சோதியாரே.

குடிகள்வருகிறபொதுவிருத்தம்.

எர்த்திசிங்கழனிதன்னி லிடும்பலபயிர்கடம்மைப்
போர்த்திடும்திருவிலைவந்து புலிகாடிகண்மான்பன்றி
சேர்ந்துவந்தழிந்துப்போடுஞ் சேதிசொல்லாந்செங்கோல்
பார்த்திபனுடனேசொல்லப் பயிரிடுங்குடிகள்வந்தார்

சட்டியக்காரன்பொதுவசனம்.

அகோ தெப்படியென்றால் ராசராசேஸ்வரனாகிய காடவமகாராசன்
சொனுவுக்குப் பயிரிடுங்குடிகளாய் வருகிறவிதங்காண்க.

குடிகள்வருகிற-தரு-இராகம்-சங்காபரணம்-தாளம்-மிசுரம்.

பயிர்செய்துவாழுங்குடிகள்வந்தார்-ஸ்ரீநா-பாரம்பரைக்காரர்வந்தார்
ஏயிர்செப்பாலன்னமுஞ்சாப்பிட்டாலும்மேவிற்
சாப்பாடுபூசிவெளியிற்றிரிந்திடும — பயிர்

ஆரியசேர்க்கோர்கட்டிய பூவேனு
திட்டபாபனையன் னதாட்டான்-சொந்த
பாளையக்காரன்பதிநெறியுடன்
டவலையங்கோபாகாட்டான்-நாளும்
பொய்க்கின்பவானைவருமட்டாலுமேயுன்னை
பெட்டிபபணநகைக்கொடுக்கறந்தனரிக்கிடாப் — பயிர்

வாயிலிருந்தாலுமேபலிசொல்லு
இவனுக்குதாதிம்பாயும்பட்டம் புவர்
வசிஷ்டுமுனெரியிஷ மகம்பிரசந்திடே
னெரிசித்தனுந்தக்ஷவண்டம்
வாராநனிகட்டிவந்தாலும் பாசல்
வாசல்சொல்லினோர்வருபயமுமல்லெலாமென்றும் — பயிர்

சுகமாயியாமிருந்தாலுந்தந்த
சுரந்தாளெலிய திகாரம்-உவரிந்
செனுகப்பிடிக்கப்பஞ்சக்குதல்மவருவதில்லை
சொல்லின்றிருந்தவாரம்வெய்யில்
பாவிராயாரரும்பாரியமேவாதவட்டி
டவேநாமெல்லாம்விட்டுவிடுவோம்வேலையென்று — பயிர்

குடிகள்போற்றுதல்-கவி.

சாரமெல்லாந்தாங்குந் தாட்சியில்லாமலென்றும்
பாருணவிற்றில்லையுறப் புரந்திடுந்திருமால்போலத்
தாரணிதனைப்பைமையைநீதி தராநவவாராமற்காக்கும்
காதிபாபோற்றியுன்றன் கனிவாசேவடிகள்போற்றி — பராக்கு

குடிகளோதயக்கிரிசொல்—விருத்தம்

சந்ததம்பயிர்கள்செய்து தங்களுக்கொப்பிலாது
நற்றவில்லாமர்மிர்த்து நாட்டியகுழகாளிங்கே

வந்தகாரியஞ்சொன்னது மன்னவர்மன்னன்முன்னே
இந்தையிற்குறையிருந்தால் செப்புவீர்செப்புவீரோ

வசனம். கேளுங்கள்குடிகளே நீங்கள்கொலுவுக்கு என்னகாரியமா ய்வந்தீர்கள் உங்களுக்கென்னகுறை அப்படியேதாவதிருந்தால் இதோ நமதுராசாவின்முன்னே சொல்லுங்கள்குடிகளே.

குடிகள்-விருத்தம்.

பொருந்சாம்புகளெல்லாம் பேதித்தேயுழுதுசெய்த
கெருங்கெப்பயிரைகளெல்லாம் நீள்புலிகாடிபன்றி
கருங்களிறிவைகளெல்லாங் கடித்தழித்திடுதென்செய்வோம்
ஒருகுடையுளைசங்காததே யோங்கியவாசர்கோவே

வசனம். சுவாமிபராக்கு தங்களுடையகடாட்சத்தினாலே எங்களு க்கொருகுறையுமில்லை மற்போனாலும் நாங்கள்பூமியிலேயிடப்பட்ட ப யிர்களையெல்லாம-புலி-காடி-பன்றி-ஆனைகள்முதலான துஷ்டமிருகங் கள்வந்து அழித்துப்போகிறபடியால் மெத்தவும்வருத்தப்படுகிறோம மகாராசனே.

இராசன்-விருத்தம்.

நயப்பயிரிடல்லாருநம கன்னியபி நகக்கூட்டம்
அயிப்பப்டனிவிதுகடி யழிப்பதாலினிமேலநீங்கள்
பயப்படவேண்டாமின்று பரிந்துநான்வேட்டையாடிச்
செயிக்கிறேனேனாமல் செல்லுவீருக்குத்தானே

வசனம். ஆனால்கேளுங்கள்குடிகளே நீங்களிடப்பட்டபயிர்களைபெ ல்லாம பலவிதமிருகக்கூட்டங்கள்கூடிவந்து அழிததுப்போகிறபடியா ல நான்வேட்டையாடி அந்தமிருகங்களையெல்லாஞ்சங்கரித்துப்போறே ன் நீங்களபயபபடாமல் உங்களுக்குசுகமாய்ப்போய்ச்சேருங்கள்குடி களே (அப்படியேபோய்வருகிறோமசுவாமி)

இராசன்-விருத்தம்.

நாட்டினிற்பயிர்களெல்லாம் நனிநிடவேவிலங்கின்
கூட்டம்வந்தழிக்குதென்று குடிகள்வந்தியம்பினத்தால்
நாட்டிகடாய்ச்செயிக்கத் தாமதமிலாமலேநாம்
வேட்டைக்குப்போகவேண்டும் வேடாவரச்செய்வீரோ

வசனம். கேளுமந்திரி வயல்களிலிடப்பட்டபயிர்களையெல்லாம்பு லிமிருகங்களழித்துப்போகுதென்று குடிகள்வந்து முறையிட்டுக் கொண்டபடியால் நாம வேட்டைக்குப்போகவேணும் வேட்டைக்கார ரையழைப்பித்துப் பிரயாணசன்னதம்பண்ணுமமந்திரி.

மந்திரி-விருத்தம்.

இடுபலவேலைக்கார விருந்திடுஞ்சேர்வைக்காரா
தொடுகழன்மன்னர்மன்னன் தோன்றலுத்தரவுசெய்தார்
வந்விலாசய்கள்வில்லும் வளைதடிவலையுமற்றுங்
கடுகியேகொண்டுவேட்டைக் காரரைவரச்செய்வாயே

வசனம். ஆடாஅடாசேர்வைக்காரா நமமுடையமகாராசா வேட்டை க்குப்போக எத்தனமாயிருக்கிறபடியினாலே அதற்கிசைந்த வேட்டை

காய் வலைகள் வளைதடி ஈட்டி முதலாகிய ஆயுதங்களுடனேவேடர்வில்லி யர்சேனைகளை அதிசீக்கிரமாகஅழைத்துக்கொண்டோடிவாடா.

அப்படியேநல்லதையாசுவாமி. வேடர்வருகிற-பொதுவிருத்தம்.

தோலினிற்குல்லாய்மாட்டிக் துளிர்த்தபாந்தழைகள்சூட்டிக்
கோலினிற்சிக்கமாட்டிக் குன்றியாபரணம்பூட்டிப்
பாலெனப்பல்லைக்காட்டிப் பருத்தநாய்கயிற்றிற்பூட்டி
வேலணியரசன்முன்னே வேட்டைக்காரரும்வந்தாரே

கட்டியன்-வ-ம். அகோதெப்படியென்றால் ராசாராசேஸ்வரனாகிய காடவமகாராஜன்கொலுவுக்குவேட்டைக்காரர்வருகிறவிதங்காண்க.

வேட்டைக்காரர்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

வேட்டைக்காரர்வந்தார்—மலையில்வாழும்—வேட்டைக்காரர்வந்தார்
ஓட்டைப்பலகைறைகள்நீட்டுங்கழுத்தணிந்து
காட்டினின்மரத்தழைவிட்டிற்குப்பிருக்கும் வேட்டை

வலைகளையெங்குஞ்சுற்றிக்கட்டியுமவிட்ட
வழியில்நாய்களைவிட்டதட்டியும்
சிலையிலம்புதொடுத்துகிட்டியும்-அதிற்
செருமிருகங்களைக்கொட்டியும்
கலைபன்றியும்பிடித்துக்கவரிமாவுமெடுத்து
மலைமுயலுடுத்துமற்றதெல்லாம்விடுக்கும் வேட்டை

தேறுமும்மைவிளைவாற்றாக்கியும்—அதைத்
தின்றுமுடம்புருகிபாசமியும்
கூறுந்தசைபாறபகிபோக்கியும்-சில்லாக்
கோலுஞ்சிக்குமுங்கையிறுறாக்கியும
சிறும்பானைவாய்கட்டி சினந்தயாளிகளைவெட்டி
வீறுந்தேனையெடுத்துவேணமட்டுநெட்டும் வேட்டை

சந்தனக்கட்டைகளைமூட்டியுமஅந்த
தணலிலிறைச்சிகளைவாட்டியும்
மந்திபோலேசிங்கத்தைநபாட்டியும்—விட்டு
மாடுகள்போற்புலியைபோட்டியும்
கந்தனையும்மதித்துக்கனவள்ளியுந்துதித்து
அந்திசந்திநினைந்தேயாடிப்பாடிக்குதிக்கும் வேட்டை

வேட்டைக்காரர்-போற்றுகவி.

முனிவருக்காகக்கந்த மூலமுஞ்சருகுநீரும்
கனிகளுநிறைந்தவெங்கள் காட்டுக்குமன்னாபோற்றி
இனிதுடனழைத்தசேதி யியம்பிடவேண்டுநாளும்
அனிதமிலாத்தெங்களாண்டவாபோற்றிபோற்றி

வசனம். அதால் எங்களை அழைப்பித்தகாரியத் திருவுளம்பற்றவே ணுமையாசுவாமி.

சேனைக்குள் வேட்டைக்காரர்களே இப்போதுநமதுமகாராசாவேட்டைக்குப்போக எத்தனமாயிருந்தபடியினாலே நீங்கள்சகலஆயுதமுஸ்திப்புடனே பிரயாணமாகவிருங்கள்வேட்டைக்காரரே.

அப்படியேநாங்கள்ஜாக்கிரதையாயிருக்கிறோமையாசுவாமி.

இராசன்—வசனம்.

ஆனால் வேட்டைக்குபபோவோமவாரும்மந்திரிகளே அப்படியேபோய்வருவோமசுவாமி.

இராசன்-மிருகங்களைக்கண்டு வேடர்-வில்லியர்க்குச்சொல்

தரு-இ-ம்-தோடி—ஆதிதாளம்.

பாரு [illegible] மிருகங்களனைத்தையும் பாரும்பாரும்வீரரே
திரி [illegible] சரியாயெண்ணக்கூடாது
[illegible] முறித்துத்தின்றுமொன்றுப போடாது
உசி [illegible] கின்கிளையைவளைத்துககாட்டி
[illegible] யெல்லாமுன்னுபசிககதைதின்னவளித்திடும பா
[illegible] பார்களைமட [illegible]
[illegible] அடிக்குதே
[illegible] வாரிபுளையையுண்டு
[illegible] அடிக்குதே
செவ [illegible] களசிறியானைககுட்டியின்
[illegible] அடிக்குதே
[illegible] சிறியகுருத்தையளைத்
தின் [illegible] அடிக்குதே
[illegible] பாசதிருது
[illegible] கூடிநற்சளிக்குது
[illegible] அடிகளுறங்குது
[illegible] வேதிரியுது பாரிதோதெரியுது பா
[illegible] மேகபாசகடி
[illegible] சாடுதே
இ [illegible] கொண்டிருந்தமற்றமிருக
[illegible] மேலோடுதே
[illegible] யெல்லாமினையைக்
[illegible] வாடுதே
கண்டு [illegible] திரளில்விழுந்தழித்துக்
[illegible] சாடுதே
[illegible] ட்டத்தைப்பாரும்
வந்தநமை [illegible] வன்கலைமானிறசேரும்
[illegible] தொடர்ந்துகுட்டியோடுது
தோன்று [illegible] துள்ளிககுதிககுதுவுள்ளிவளைச்குது பா
[illegible] பழகைககண்டு
சோர்ந்துபெண்மயிலாசைபெருக்குதே
[illegible] வெறியேற்றிரதினத்தை

சுந்தமானகராந்துக்கொண்டிருக்குதே
வாரைபாடாண்பெண்ணுமாய்ப்பஞ்சவன்னக்கிளிகள்
மங்கையர்போலப்பேசிச்செருக்குதே
மாசில்புனுகுபூனைக்கூட்டம்புறப்பட்டதால்
வாசமெங்கணும்பரிமளிக்குதே
ஏசியகாட்டுப்பசுபாலாலெங்குஞ்செருக்குதாம்
எருமைப்பாலிறைப்பின்னுமிருகமெப்பின்கூறுகும்
ஆகையாலிந்தமிருகங்கள்பட்சிகளாலே
மன்க்கமில்லைபூருக்கேயதனைவிடுத்தினிகடினமாகச்சொலும் பல

வேட்டையாடுகிற—தரு—இ—ம்—காம்போதி—ஆதிதாளம்.

வேட்டையாடுவமவாரும்—வாரும்போகுதுபாரும்—வேட்டை
வேடர்பலருடனே கூடிமருவின வேட்டை
காட்டிலிருந்தேநாயிந்தநாட்டிலிடுமபிரின்
கனத்தைபழிக்குர்பாலவினத்தில்லா நமிநக
மனைத்தும்பொருதியொருதினத்திலதங்கள்செய்ய வேட்டை
காலுயர்ந்தமார்வைநாட்டுங்கள்—அதில்
காப்பவிட்டதட்டியோட்டுங்கள்
கோலமாமிறைச்சில்லாச்சோலையுமபுருந்து
நந்தியமச்சாடித்துவதைக்கா
நரியேபிதிகநேக்கிழுத்துவிடுத்திட வேட்டை
மாசர்பன்றியுமகன்றுப்பக்கிடுங்கள்—அதை
மடக்கிபோடவொட்டாமல்சாமிக்கால்
கானப்பறவைக்கூட்டத்தைநாடிச்சுலைநடுங்க
நாசமிருகம்பிடபேபதாகத்திட
விசுகனைநமொசாடுவேளினமற்றிட வேட்டை
பரிமபாளிர்கூட்டத்தைப்பாருங்கள்—இதை
சமநதைநாவெசயித்துகிருங்கள்
லைகரின்கூட்டத்தைபிதுங்கவொட்டாமனும்
பெருநுபிறைக்களைகொடுசிராமற்றிட
குடல்களுமிற்றிடஅடுவெனிலைப்பட வேட்டை

இராசன்—விருத்தம்.

குடிகளுக்கினியேலொன்றுங் குறைகளில்லாமல்வந்து
கொடியவெம்மிருகமெல்லாங்குறிப்பறச்செயித்துப்போட்டோம்
இடியெனமுரசமார்ப்ப வெடுத்திடவேடங்கண்மாற்றிக்
கடிநகர்தனைச்சேசெல்வோங் களித்தாரிவருகுவீரே

வசனம். கேளும்மந்திரிகளே நாமிந்தவனத்திலே சகலதுஷ்டமிருகங்களையெல்லாஞ்சங்கரித்து இனிகுடிகளுக்கு ஒருபயமுமில்லாமற்செய்தோம் ஆனால்நாமிங்கேவந்துநேரமாயிற்று இப்போது சேனைகளுடனே நமதுநாட்டுக்குப்போவோம் வாருமந்திரிகளே.

அப்படியேபோவோமவாரும்சுவாமி இராசன்சரித்திரம் முற்றும்

பொது—விருத்தம்:

தவப்பரஞ்சோதியென்பார் சந்திரச்சடிலநாதர்
சிவப்பெருந்தொண்டர்க்கெல்லாம் திருத்தொண்டுசெய்தவாற்
றுவர்க்குலகில்யா ருமுயர்சிறுத்தொண்டனென்றே
நவப்பெயர்தரித்தேயன்ன நல்கிடவருகின்றாரே

கட்டியக்காரன்-வசனம். அதேதெப்படியென்றால் காடவமகாராச னிடத்திலே அனுக்காரராயிருந்த பரஞ்சோதியானவர் அந்தக்காடவ மகாராசனாலே துதிசெய்யப்பெற்றுப் பரமசிவனுடைய பெரியதொ ண்டர்களுகருள்ளே தாமொருசிறியதொண்டரென்று திருப்பெயரு டையவராகச் சிவனடியார்களுக்கு அன்னதானங்கொடுக்கும்படியான து தேவியாராகிய திருவெண்காட்டு நங்கையாருடனேகூட சிறுத்தொ ண்டநாயனார் வருகிறவிதங்காண்க.

சிறுத்தொண்டர்—வருகிற-தரு-இ-ம்-ஆரபி—தாளம்-திரிபுடை.

சிறுத்தொண்டநாயனார்வந்தார் திருவெண்காட்டுத்தேவியாருமகிழ்
மேவிபருகிலுறச்சிறுத்தொண்டநாயனார்வந்தார்
சிவந்தப்பிறையணிந்தபெருந்தசடையுமேனி
சிவந்தவுருவுமகறுத்தகளமுநன்
னிருத்தபதமுமுள்ளுறாததிற்குதிகொள்ள — சிறுத்
திகழுங்குல்லாவும்புனைந்து
திரமுற்றிடசரிகைதகதகெனத்திகழும்
சித்திரமதில்சுற்றிடுமெழுதிட
ரத்தினமயமுற்றிலுமொளிவிடத்திகழும்
நுதலதனிற்றிரிபுண்டரமுமணிந்து
மகிமைபெருங்கங்கைசிவமாலிகைநலங்கொள்
வழுத்தாந்திருமுறைபழுத்தமொழியும்பொன்
னிழைத்தகதிர்மணி தழைசசெவிகளுடன் — சிறுத்
அணிருத்திராட்சங்களிலங்க
அவிர்பொற்சொர்ணகுவளை ஒளிருநூபுறம் அணி
அந்தச்சிறுப்பவளமணியுமுயிர்
சங்கதெழுதாளமுமிடையிடைஅணி
மீதினிற்றிருவாபரணமாய்த்துலங்க
மணிபொளிபொற்பட்டுவஸ்திரந்தனைப்புனைந்து
வணங்கமலமலர்தமக்குநிகரினை
பாதக்குறடுகளுமிதித்துமதிப்புறச் — சிறுத்
பரமர்க்குகந்தநேசர்
பிரிதிக்கலைமதியுமிருவிழியின்பரம
பங்கயனரியுந்தினமும்பணி
சங்கசால்பொங்கரவம்புனை
பரமருக்குகந்நேசா
அடியவர்க்குப்பக்திசெய்விசுவாசர்

சாதகிழுமணிபுத்திரிநீதவர்களிச்சண்டால்
தாழ்ந்ததால் மறைத்திருந்தகடைசியில
விழுந்துவந்திசெயபாழ்ந்துமுதந்துள சிறுத்

திருத்தொண்டர்சொல்-விருத்தம்.

பாமிசைவருந்துயபாசப்பந்தமறுத்தோரு
பொடியணிபவன்றனைப்போற்றிக்கொண்டிருக்காக
செடிபொருந்துசோலைசூழ்தா செங்காட்டங்குடிதன்னை
கொடிதனையுயர்பாசக் கொண்டிருந்தோமே

வசனம். கேளுங்கோசோலைதாதா பன்னிரெண்டு வயு
ம்பிள்ளாய் (அப்படியே பயன்னாசெயது டெடுநைக்கிறேன்சுவாமி)

திருத்தொண்டர்சொல்-விருத்தம்.

அருந்தகிதையாரிப்பயர்க்காமயிலிகொாய்
மருந்தருநாடயீசன் மைந்தரிய புனம
பொருந்திபவழியாதீவா பெண்சய தலாய்வந்தீத
அருந்திடசெய்யவொன்றனைக்கு கொண்டுவாருமென

வசனம். கேளுந்திருவெண்காட்டுநங்கையேயடியவர்யார்
களுக்கு அன்னதானங்கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

திருவெண்காட்டுநங்கைசொல்-விருத்தம்.

சிந்தையன் தனமுடைத்ததேவரிரனையாரிர
அந்தநல்லாதந்த பனைதருசமையைத்தரிக
இந்தநலவேளைதன்னில் குவொந்தாதாடிய
சந்தனநங்கைதன்னைத் தருடன்வரச்செய்வீர்.

வசனம். கேளுமென்பிராணநாதா அடியார்களாம சிவனடியார்களு
க்குநல்ல உபசாரத்துடனே அன்னதானஞ்செய்து நமதுமனக்குறை
யைத்தீர்த்துக்கொள்ளலாம் அதற்குபகாரமாயுபசாரங்களைச்செய்
து தீட்டப்பணாமுமென்னுடைய பணிப்பெண்ணாகிய சந்தனநங்கையை இப்
போதழைத்துவாருங்கள் சுவாமி (அப்படியே யழைப்பிப்போம் பெண்ணே

திருத்தொண்டர்சொல்-விருத்தம்.

காரிடத்திரிந்ததிசையர் தமுள்ளசோலைசூழ்தா
குறியவிழிபாலிசேந்தேந்த குவலையமெழியாவாசத்த
தாரணிகுழலாரான சந்தனநங்கைதன்னைச
சீர்தாயமைத்துவாராய சிக்கிரமாகத்தானே

வசனம். சேருஞ்சோலைகாதா சந்தனநங்கையை இவ்விடத்
திலேசீக்கிரத்தில் அழைத்துக்கொண்டுவாரும்பிள்ளாய் அப்படியே ய
ழைத்துவருகிறேன்சுவாமி.

சந்தனநங்கைவருகிற-பொருவிருத்தம்.

குந்தமராமுகையாள்வள்ளிநேரிதபெருமிடையாள்கூர்வேல்
அந்திரவிழியாள்செய்ய வாயமுகசந்திரகாந்திட்டு

சித்திரநுதலாள்கொண்டல் திரண்டமென்குழலாள்பச்சை
தத்தைபோலமொழியாளான சந்தனநங்கைவந்தாள்

கட்டியக்காரன்-பொருவசனம்.

அதேதெப்படியென்றால் சிறுத்தொண்டநாயனாருடையசமூகத்திற்கு சந்தனநங்கைவருகிறவிதங்காண்க.

சந்தனநங்கைவருகிற-தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

சமயகுசிறுத்தொண்டர்பணிசெயுஞ்சந்தனநங்கைவந்தாளே
தமையெவருமறிந்துடபநடந்துணைசாலிகொன்றைத
தார்மேவுஞ்சடையார்விடைபார்பவர
சீர்பாதந்தினமேபணிவாளால் — சமய
பொருந்துநூதவிரண்டிஞ்சிலையாள்-மிசைப்
புளகாருறப்பூமாலையாள்
இருந்தவபிறுபாசியிலையாள்—ஒளி
இலகுமணியணிமேகலையாள்
கருங்குவளைவிழியாள்சாறுவுந்திச்சுழியாள்
கார்மேவிய தூயின்மொழியாள்—மிரு
பாமேவியமயிலனையாள்-வெகு — சமய
உயர்ந்தசரிகைச்சேலையுடையாள்-புவி
ஒதரியபாக்கியமுடையாள்
நயந்ததுடிபோற்பிடியிடையாள்-பல
நாளுமபணிசெய்பப்பின்னிடையாள்
வியந்தகமலமிசைவிளங்குமன்னநடையாள்
மேலாகியகேள்வியினால்
மாலாவதொலாமிசமேவடீல — சமய
நாவாற்றுதியஞ்சக்ஷரத்தாள்-சிவ
நாதன்பணிசெயுஞ்செஞ்சரத்தாள்
பூவார்மதுரவசனத்தாள்-சிவ
பூசைசெய்வதில்முசற்பரத்தாள்
தேவாரமுந்தெய்வத்திருமுறையுமபடித்தறச்;
சிந்தாகுலமானதொலைபா
நந்தாதபெருஞ்செல்வமேபெருஞ் — சமய

சந்தனநங்கைசொல்-விருத்தம்.

மதியெனத்திகழ்ந்தசெந்தா மரைபொனமுகமலர்ந்தே
அதிகநற்றயவாறுரு மாண்டநாயகியேயிந்த
ததியினிலடியாடன்னைத் தகவுடனழைத்ததேந்த
விதமதைதெரிபநன்றாய் விளம்பிடவேண்டுந்தாயே.

வசனம். கேளுமம்மா இப்போதுஎன்னைபழைப்பிததகாரியந் தெரியச்சொல்லும்என்தாயே.

திருவெண்காட்டுநங்கையார்சொல்—விருத்தம்.

கலசமுமலையும்வட்டுங் களிறுநன்னேமிப்புள்ளுந்
சலசமுமுலைகொப்பான சந்தனநங்காய்கேளாய

பணிவுடனடியாரிடமேபோ வாருமெனவாரணம்புசிக்கச்
சோறுமனைக்கனத்திலேச சுறுக்கினிற்சமைத்திடவே

வசனம். வேளுந்தசந்தனநங்காய் இப்போதுநாம சிவனடியார்களுக்கு அன்னதானஞ்செய்துவைக்கசந்தனமாயிருக்கிறபடியினாலே நாமு படையமைக்கப்போய் சகலவிதமறியமார்த்தங்களுடனே சாதஞ்சமைத்து அதிசாக்கிரதைசெய்யவேண்டும்பெண்ணே (அப்படியேசாக்கிரதையாகச்செய்கிறேனம்மா)

சந்தனநங்கை சாதஞ்சமைக்கிற—தரு

இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

சமயலானவிதஞ்சாற்றுவேனென்னல்லசமயலானவிதஞ்சாற்றுவேன்
உமையொருபாகருக்கேற்றவடியவர்கள்
அமையுமமைப்பையெனதுரையுங்கேண்மகிழ்ந்து — சமய

முல்லைபதுமமெனவேநல்லசாப்பாவன்னமும்
முள்ளங்கிகத்திரிவாழைக்காய்கிழங்குபாகல்
சொலவேப்பம்பூசீனிபுடலங்கொத்தவரைபவரை
சேர்க்கைநல்ல நெல்லிலையுந்தபொரிக்கறியா — சமய

கூட்டுக்கறியுமைங்காட்டிபச்சடியுடன்
குழம்புஞ்சாற்றமுதும்பொரியலும்வெந்தபருப்பும்
காட்டிக்கதிதங்காய் முந்திரிபருப்பினொப்பம்
நல்லுளுந்துவடை பாயசமுடன் — சமய

பழுக்கப்போட்டிருக்கும்பெரிப்பையும் வடைதோசையும்
பழுத்தமாம்பழமுங்கடையுமெலுமிச்சங்காயிரண்டையும்
செழுமதுரமுளமெச்சு நெய்தயிரையுமாசையுங்
திர்க்கவேகையாய்புளியோதனமுடன் — சமய

சந்தனநங்கைசொல்—விருத்தம்.

நிறைநெய்பொரியவகனி—அனைத்துமன்னமையப்படியே
அறுசுவைகறியுடனே—சிறப்புடனேசெய்தேன்

வசனம். சேவகமாராகிறவர்காட்டுத்தெங்கையாரே உமதுஉத்தாரப் படியே சிவனடியாரைத்தேடியனுப்ப அறுசுவைக்கறிகார்களுக்குகறிகளுடனேசாதமுஞ்சமையலுஞ் சாக்கிரதையாயிருக்கிறதம்மா.

சிவனடியார்கள்வருகிற—பொதுவிருத்தம்.

சடைமுடியணிந்தோர்நாமங் களுஞ்சிவயோகஞ்செய்வோர்
சடைவேறேனவாகைதரித்தோர் சதுர்சாஸ்திரர்கள்வழி
இடைகளிறுபிடித்தோர் முன்னமிட்டுமயில்லறத்தோர்.
கொடைசிறுத்தொண்டர்தங்கள் குடிக்குப்பேவருகின்றாரே.

கட்டியக்காரன்—வசனம்.

அதோகேளப்பாவென்னால் சிறுத்தொண்டநாயனாரிடைக்கு ஆசனம்போசனஞ்செய்யச்சிவனடியார்வருகிறவிதங்காண்க.

பண்டாரங்கள்வருகிற ஆனந்தக்களிப்பு.

அடியவரெல்லோரும்வந்தார்—மிக—அவரவர்க்குள்ளகுறைகளைச்
சொல்லியடியவரெல்லாரும்வந்தார்
வடிவுலாவியவுமைபாகா—கலை
மாதவர்காரியந்தேகாவென்றே — அடி.

நாயன்சிவப்பிரகாசம்—சந்த
நாளுஞ்சிதம்பரந்தன்னிலேவாசம்
நேமமுடனேதைப்பூசந்—தனில்
நின்றுபிராயபோர்க்கன்னமிடுவேனென்றும் — அடி.

நாளும்நிலாதிந்தமேதேகா—அதை
நாடிச்சிறந்துசெய்வேனசிவயோகம்
ஆறுமேபானந்தபோகமுசெங்கை
அன்னமிட்டால்போதுமன்பாநீரென்றும் — அடி.

வந்தோரில்நானொருதாசன்—நித
மானதபூசைவழுவாமற்செய்வேன்
கந்தைதனில்லாமலேதைவேன்—இப்பா
சட்டிடச்சோமன்றரிதாய்வேனென்றும் — அடி.

சாளக்கிராமமொன்பூசை—யதில்
சாக்கியிருந்தபுழுப்பட்டுத்தாசை
காவிசவந்ததாலேஆசை—யுடன்
கட்டிடவேணுகலைதருவீரென்றும் — அடி.

சிவபூசைவட்டிலுங்கட்டுப்—சொந்த
மேதுவெனடுத்தேசட்டிபோனதுடும்
கவலையில்லாததைத்தந்தால்—புண்ணியம்
கட்டிக்கொள்வீர்செல்வங்கட்டிக்கொள்வீரென்றும் — அடி.

திருவண்ணாமலையிலேவன்வீடு—சுவர்
செங்கலிடிந்துபாழாகிறதோடு
திருமடங்கட்டிடச்செய்தால்—நாளுந்
தெழித்திடச்செல்வஞ்செழிக்குமென்றேதல் — அடி.

பண்டாரங்களைச்சிறுத்தொண்டர்போற்று—கவி.

நிருமலன்றனைப்பூசித்து நின்றுநீருயர்ந்ததாலே
மருவுபூங்கழலைப்பூசித்து வஞ்சனையுய்யவேண்டி
அருமையாயணிந்தவர்க்கு மாலையுநீறும்போற்றி
